தாண்டனே பதவியிலிருந்து விலகுக!

காங்கிரஸ் கட்சிக்குள் ஊழல்

(0)

தேர்தலில் நடந்த மானக்கேடான சூழ்ச்சிகள்

(0)

ஆசார்ய கிருபளானி தரும் தகவல்

பம்பாய், டிச. 16—

காங்கிரஸ்காரர்கள் இங்குமட்டுமன்று எங்குமே ஊழல்களில் இறங்கி விட்டனர். அகில இந்திய காங்கிரஸ் தலைவராக வந்திருக்கும் பாபு புருஷோத்தமதாஸ் தாண்டன், தம் தேர்தலில் மானக்கேடான முறைகளைக் கையாண்டதாக மற்றொரு பெரிய காங்கிரஸ் தலைவரே கூறுகிறார்.

காங்கிரஸ்காரர்களுக்குள்ளேயே சண்டைகள் கிளம்பிவிட்டபடியால், அவர்களுடைய ஊழல்கள் ஒவ்வொன்றாக வெளிப்படுகின்றது. சென்னையிலே காங்கிரஸ் அமைச்சர்கள் பற்றிய படலங்கள் வெளி வந்து, அவர்களுக்கிடை பதவி மோகம், பிற ஆசைகள் எந்த அளவு இருக்கின்றன என்பதை வெளிப்படுத்தியதன்றோ?

பொதுவில் இவை யனைத்தும் பொது மக்கள் விழிப்படைய மிகுந்த பலனுடையவைகளாயிருக்கும். காங்கிரஸ்காரர்கள் வெறும் வாய்ப் பேச்சு வீரர்களே ஒழிய, உண்மையில் அவர்கள் நிர்வாகத்திறனோ பரந்த கருத்தோ உடையவர்களல்ல வென்பதைப் பொது மக்கள் இவற்றிலிருந்து நன்கு அறியலாம்.

காங்கிரஸ் பேரவையிலிருந்து ஆசார்ய கிருபளானி பிரிந்து குடியரசுக் கட்சி ஒன்றை நிறுவினார்! இதன் மீது அவரையும் அவர் தோழர்களையும் காங்கிரஸ்காரர்கள் மிரட்டத் தொடங்கினர். ஒழுங்கு நடவடிக்கைப்பேச்சு கிளம்பியது. சென்னையில் காங்கிரஸ் அமைச்சர்கள் மீது ஊழல் குற்றம் சுமத்திய பிரகாசத்தின் மீது ஒழுங்குப் பிரச்னை கிளப்பப்பட்டதுபோன்று.

தாண்டனை தலைவராகக்கொண்ட காங்கிரஸ்காரர்கள், ஆசார்ய கிருபளானியைத் தலைவராகக்கொண்ட காங்கிரஸ்காரர்களிடம் கடுமையாக நடந்துகொள்வதாகத் தெரிகிறது. ஆனால் கிருபளானி கூட்டம், தாண்டன் காங்கிரசின் வஞ்சகம், மோசடி முதலியவை பற்றிய ஆதாரங்களை வைத்திருக்கின்றனர் என்றும், அவற்றை வெளியிட்டால் நாட்டிலுள்ள மிக்க கேவலமான குற்றவாளிகூடக் காங்கிரசின் இச்செயல் கண்டு நாணமடைவான் என்றும் கருதப்படுகிறது.

இதற்காக அஞ்சிய தாண்டன் காங்கிரஸில் பிளவேற்படுத்த வேண்டாமென்று ஆசார்யாவைக் கேட்டுக் கொண்டார். ஆசார்யாவே, காங்கிரஸ் தலைவர் தேர்தல் பற்றிய விசாரணை ஒன்றை விரிவான முறையில் நடத்தவேண்டுமென்று அறிவித்துள்ளார்.

ஒழுங்கு முறைகள், மனிதத் தன்மை முதலிய அனைத்தையும் மறந்து பொய், இலஞ்சம், வஞ்சகம், மோசடி, ஏமாற்று, மிரட்டுதல், ஆள் மாறாட்டம், சதி முதலிய அனைத்தும் தலைவர் தேர்தலில் கையாளப்பட்டிருக்கிறது என்றும், இவற்றால்தான் தாண்டன் தலைவராக வர முடிந்ததென்றும் ஆசார்ய கிருபளானி அறிவிக்கிறார்.

ராஜஸ்தானில் 120 ஓட்டுகளைப் பெறத் தாண்டன் கைக்கொண்ட முறை ஒன்றே பொதுமக்களிடைக் காங்கிரஸின் மானக்கேடான ஊழலை விளக்கப் போதுமானதாக இருக்கும் என்று ஆசார்யா கூறுகிறார்.

எனவே, பாபு புருஷோத்தமதாஸ் தாண்டன் மோசடியாகத் தலைவர் பதவியில் அமர்ந்திருப்பதால் முதலில் அப் பதவியிலிருந்து விலகிஒழிந்தால்தான் காங்கிரஸில் ஒற்றுமை ஏற்படுமென்று கூறுகிறார்.

தாண்டனோ ஆச்சார்ய கிருபளானி மீது குற்றம் சுமத்துகிறார்.

இவற்றிலிருந்து பொது மக்கள் இந்தக் காங்கிரஸ்காரர்கள் எத்தகையவர்கள், எப்படித் தேர்தல் நடத்துகிறார்கள், பதவி என்றவுடன் எப்படி யெல்லாம் நடந்து கொள்ளுகிறார்கள், என்பவைகளை நன்கு தெரிந்து கொள்ளுதல் கூடும்.

Regd: No. M. 5458 Phone No. 4502:

விலை அரை அணா இலங்கை 5 சதம்

மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 19—12—50 | மணி 17

அழிவுப் பிரசாரத்தை விட்டு ஆக்கவேலை செய்வார்களா?

(:0:)

குடிசைகள் அதிகரிக்கின்றன

(0)

குப்பைமேடுகளிலே குடில்கள்

சென்னை, டிச. 17—

போலீஸ்வான்கள்; ஈசலைப் போன்று போலீஸார் லாரியைவிட்டுத் தாவினர். குடிசைகள் பிய்த்தெறியப்பட்டன. மண்பாண்டங்கள் தடியால் உடைக்கப்பட்டன. பெண்கள் உடைந்த சட்டியையும் தங்கள் உடைமைகளையும் பாபரப்பாக வெளியேற்றினார்கள். இளங்குழந்தைகள் ஒன்றும் விளங்காமல் தன் தாயின் காலை பின்னிக்கொண்டன. கீத்துக்களையும், மூங்கில்களையும் கார்ப்பரேஷன் வான்கள் ஏற்றிச்சென்றுவிட்டன. ஏழைகள் பழங்குடி மக்கள் பரதவிக்கின்றனர் வீடுகள் குப்பைமேடுகளாக்கப்பட்டன. மரத்தின் ஓரங்களிலேயும், குட்டிச்சுவற்றின் கீழேயும் உணவு சமைத்து, உண்கின்றனர். பரிதாபகரமான நிலை. இந்த நிகழ்ச்சி கார்ப்ரேஷன் மனைகளில் அனுமதியில்லாமல் குடிசை போட்டுக்கொண்டு வாழ்ந்த மக்களின் நிலை.

அந்தப்படி பழங்குடி மக்கள் சிறிது நாட்களில் வேறோர் இடத்தில் குடிசை கட்டுகின்றனர் ஐந்து ஐம்பதாகமாறுகிறது. அங்கேயும் சில மாதங்களுக்குள் கார்ப்பரேஷன் டிராக்டர்கள் அக்குடிசைகளை சமப்படுத்திவிட்டுச் செல்கின்றன. இது சென்னையில் வாழ்பழங்குடி மக்களின் பரிதாபநிலை. இதை மக்களும் கண்டிருப்பார்கள். அவர்களுக்கு எத்தனையோ பிரச்சனை. ஐயப்பனாரின் தரிசனத்தைவேண்டி; ஆண்டவனின் அலங்காரத்தைக் காண ஆவலுடன் செல்லுவது இன்னும் பல. இவைகள் மக்களின் கண்களுக்கு கேளிக்கையாகவோ வேடிக்கையாகவோ இருக்கலாம். அப்படி இல்லையெனில் இந்த

(3ம் பக்கம் பார்க்க)

அரசாங்கத்தின் அடக்குமுறைத் தாண்டவம்

(0)

அண்ணாவின் காகித 'பேல்'கள் ஏலம்

(0)

பெரியாரின் கார் ஏலத் தேதி ஒத்திவைக்கப்பட்டது

சென்னை, டிச. 15—

சென்னை "திராவிடநாடு" அலுவலகத்திலிருந்து போலீசாரால் கொண்டு செல்லப்பட்ட காகித பேல்கள் 14-12-50 மாலை ஏலத்தில் போடப்பட்டன.

ஏலம் சி. 3. போலீஸ் ஸ்டேஷனில் போலீஸ் அதிகாரிகளால் நடத்தப்பட்டது. ஏலத்தில் பல வியாபாரிகள் கலந்துகொண்டனர். காகித பேல்கள் யாவும் ரூபாய் 750-க்கு சூளை வாசி ஒருவரால் எடுக்கப்பட்டன.

பெரியார் கார்

அரசாங்கம் பறிமுதல் செய்திருந்த பெரியாரின் கார் திருச்சி போலீஸ் ஸ்டேஷனில் இருக்கிறது. இதனை ஏலம்போடும் தேதி 16—12—50 என முதலில் அறிவிக்கப்பட்டுப் பின்னர் ஏலத்தேதி ஒத்திவைக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பத்திரிகை சுதந்திரத்தில் கை வைக்கும் மசோதா

பாக்தாத், டிச. 17—

பத்திரிகைகளின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் மசோதா ஒன்று இராக் பார்லிமெண்டில் கொண்டு வரப்பட்டிருந்தது. இதற்குள்ள எதிர்ப்பைக் கண்ட இராக் பிரதமர் நூரிபாஷா இம் மசோதாவை வாபஸ் பெற்றுவிட்டார்.

மாலைமணி

சென்னை 19—12—50 செவ்வாய்க்கிழமை

ஆளவந்தாரின் ஆசை தீர்ந்ததா?

நாட்டிலே, மக்கள் நலன் கருதி உழைப்பவர்களுக்குத் தடைகள், தண்டனைகள், அபராதங்கள், பறிமுதல்கள், ஏல விற்பனைகள் என்ற முறையிலே, இன்றைய நாடாள வந்தவர்களின் மனப்பாக்கு இருந்துவருகிறது.

மக்களிடையே உயர்வு தாழ்வு கூடாது. அறிவுக்கு விரோதமான செயல்கள், சொற்கள், நூல்கள், காட்சிகள் நாட்டிலே நடமாடக் கூடா என்பதே திராவிட இயக்கத்தினரின் கொள்கை. மக்கள் அறிவிலும் ஆற்றலிலும் உயர்வடைந்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொண்டு, எல்லோரும் ஒன்றென்னும் நன்னோக்கத்துடன் பணியாற்றுதல் வேண்டும் என்னும் கருத்தைத்தான் திராவிட இயக்கத்தினர் துவக்கமுதல் இன்றுவரை கூறிக்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு பொது மக்கள் அறிவைப் பாழ்ப்படுத்தும் முறைகளை, நூல்களை, வழக்கங்களை, சடங்குகளை, சட்டதிட்டங்களை, ஆசாரங்களைத் திராவிட இயக்கத்தினர் மிக வன்மையாகக் கண்டித்து அவற்றின் ஊழல்களை வெளிப்படுத்தி, மக்கள் அவற்றையெல்லாம் நம்பக்கூடாதென்று எச்சரித்து வருகின்றனர்.

இவ்வாறு எச்சரிக்கை செய்து எழுதப்பட்ட நூல்களே: நம் இயக்க நூல்கள் எனப்படுபவை. இவற்றுள் அண்ணா அவர்களின் "ஆரியமாயை" அரசாங்கத்தின் கண்களை உறுத்திற்று. அடக்குமுறை நடைமுறையில் வந்தது. சிறைவாசம், அபாரதம் எனத் தாண்டவமாடியது. அபராதம் கட்ட மறுத்துச் சிறை சென்றும், அண்ணா அவர்களை விடுவித்து, அபராதத்திற்காக ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள காகித மூட்டைகளைக் கைப்பற்றிச் சென்று ஏலத்தில் 750 ரூபாய்க்கு விற்று விட்டது. இன்று இதேபோன்று பெரியார் ஈ. வே. ரா. எங்கெங்கோ, எவ்வெப்போதோ பேசியவைகளைத் திரட்டி வெளியிடப்பட்ட ஒரு நூலுக்காக அண்ணா அவர்களைப் போன்றே அபராதம் கட்ட மறுத்துவிட்ட பெரியார் அவர்களின் கார் கைப்பற்றப்பட்டு, ஏலத்தில்விட எண்ணி, வெயிலிலும் மழையிலும் பாழடித்து வருகின்றனர் எனத் தெரிகிறது.

நாட்டிலே மழை பெய்யாவிட்டால் வருணபகவான் ஜபம் நடைபெறுகிறது. மந்திரம் ஓதப்படுகிறது. பூசை போடப்படுகிறது. இவற்றிற்கும் மழைக்கும் எந்தவிதமான தொடர்புமில்லை என்பதை அரசாங்கம் அறிந்திருந்தும், இவற்றால் மக்களின் அறிவும் பணமும் பாழாகின்றன என்பதை அரசாங்கம் அறிந்திருந்தும் இவற்றைத் தடை செய்ய அரசாங்கம் முன்வரவில்லை.

நாட்டிலே, ஒரு குலத்தவர், உயர்ந்தவரென்றும் மற்றக் குலத்தவர் தாழ்ந்தவரென்றும் கூறும் நூல்கள் சாஸ்திரம் எனும் பெயரால் நிறையவிருக்கின்றன. ஒரு குலத்தை உயர்த்தி மற்றக் குலங்களைப் பழிக்கும் நூலகள் ஸ்மிருதிகள் எனும் பெயரால் நிறையவிருக்கின்றன. ஒரு குலத்தவர் படிக்கலாம் மற்றையவர் படிக்கக் கூடாதென்னும் வேறுபாட்டைக் கூறும் நூல்கள் இருக்கின்றன. அறிவை மயக்கும், ஒழுக்கத்தைக் கெடுக்கும் முறைகளை மதச் சம்பிரதாயங்களாகக் கூறும் நூல்கள் பல இருக்கின்றன புராணங்கள் என்னும் பெயரால்.

ஆனால், அரசாங்கம் இவற்றையெல்லாம் அறிந்திருந்தும், இவற்றைத் தடை செய்ய முடியவில்லை. இவற்றைத் தடைசெய்ய முடியாது. ஏனெனின் அக்கிரகாரம் அலறி எழும் என்ற அச்சம் போலும் அரசாங்கத்துக்கு. ஆனால் அதே சமயத்தில் நாட்டு மக்களின் நியாயமான செயல்களுக்குத் தடை, பறிமுதல், ஏலவிற்பனை என்றெல்லாம் இந்த ஆட்சியாளர்கள் அடக்குமுறைத் தாண்டவமாடிக்கொண்டிருந்தால், இந்தத் திருவிளையாடலின் உண்மையைப் பொது மக்கள் உணர்ந்துகொள்ள நீண்ட நாள் ஆகுமோ? எந்தச் சட்ட விதிப்படி அறிஞர் அண்ணா நூல் குற்றமுடையது என்று கூறப்படுகிறதோ அதுபோலப் பத்துப் பதினைந்து சட்டவிதிகளின் கீழ்ச் சாஸ்திர ஆகம புராணங்கள் குற்றமுடைய நூல்களாக இருக்கின்றனவே என்பதைப் பொது மக்கள் அறிய நெடு நாள் பிடிக்கா. இப்போதே பொது மக்கள் அறிவர். ஆளவந்தார் தேர்தல் காலத்தில் எதிர்க்கட்சியினர் இல்லாதபடி செய்துகொள்ளவே இந்தத் தந்திரங்களைக் கையாளுகின்றனர் என்பதைப் பொது மக்கள் நன்கு தெரிந்துகொண்டிருக்கின்றனர். ஆனால் அரசாங்கம் இவற்றைத் தெரிந்துகொண்டாலும் தெரிந்துகொள்ளாமல்தான் இருக்கும். ஏனென்னின் காங்கிரஸ்காரர்கள் உடற்றோல் தடித்த அரசியல்வாதிகளல்லவா?

மாஸேதுங்குடன் ஆலோசனை

பிளஷிங்மெடோ, டிச. 18—

கொரியாவில் யுத்த நிறுத்தம் ஏற்பாடு செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஐ. நா. மூவர் கமிஷன் மெம்பர்கள் தோழர் பி. என். ராவ், என்டஸீம், லெஸ்டர்பியர்ஸன் பீகிங் செல்ல உத்தேசித்திருக்கின்றனர். சீனக் குடியாசு பிரசிடெண்ட் மாசேதுங்குடன் நேரில் கலந்து பேசவே இக் கமிஷன் செல்லவிருக்கிறது.

இக்கமிஷன் முதல் தடவையாக கூடி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைக் குறித்து ஆலோசித்திருக்கிறது.

கூடுமான வரை பீகிங் தூது கோஷ்டித் தலைவர் ஆ வுடனேயே பேசிகாரியத்தைச்சாதிக்கப் பார்ப்பதென்றும், முடியவில்லை என்றால் தான் பீகிங் செல்வதென்றும் இக் கமிஷன் உத்தேசித்திருக்கிறது.

தெய்விக மருந்து காலரா பரவ வழிகாட்டியது

ஒரிசா, டிச. 16—

நேபாள் பாபா என்னும் சிறுவன் தந்த தெய்விக மூலிகையை வாங்கச் சென்ற மக்களுக்கு விசேஷ போக்குவரத்து வசதி செய்தளித்த ஒரிசா அரசாங்கம், இந்திய விஞ்ஞானி சர் சி. வி. ராமன் அறிக்கை விட்ட பின் ஞானமடைந்து, அச்சிறுவன் தெய்விக மூலிகை கொடுத்த இடத்தில் காலரா நோய் கடுமையாக ஏற்பட்டு, அங்குக்குழுமிச் செல்லும் மக்களால் நாடெங்கும் பரவத் தொடங்கியதை அறிந்து, அங்கு எவரும் போகக் கூடாது என்று 144 பிரிவுப்படி தடை போட்டுவிட்டது. அந்த மூலிகையால் எந்தப் பிணியும் போகவில்லை என்று உத்தியோக தோரணையில் ஒரிசா அரசாங்கம் அறிவித்திருக்கிறது. ஆனால் பிணியகலுவதற்குப் பதிலாக, காலரா பரவி விட்டதுதான் தெய்விக மூலிகையின் பலன்.

ரஷ்யா தயாரிக்கும் புதிய ஆயுதம்

லண்டன், டிச. 18—

அணுக் குண்டுகளை அதிக அளவில் ரஷ்யாவால் தயாரிக்க முடியாததால் அது நீண்ட தூரம்பாயக் கூடிய ராக்கெட்டுகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டு வருகிறதென்று தெரிய வருவதாக 'டெய்லி கிராபிக்' பத்திரிகை ஒரு செய்தியை பிரசுரித்திருக்கிறது.

இலங்கைக்கு விமானப்படை

கொழும்பு, டிச. 18—

இலங்கை விமானப் படை இப்போது அமைக்கப்படவிருக்கிறது. சண்டை விமானங்கள் கொண்ட கிருஸ்துவாட்ரனும், மற்றொரு வாலண்டியர் படிவொட்ரனும் முதலில் ஏற்படவிருக்கிறது முதலில் விமானிகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியிருக்கிறது. முதல்இரண்டு ஆண்டுகளில்20 விமானிகள் பயிற்சி பெறுவர்.

இந்தியாவில் வியாதி பரவக் காரணம்

நியூயார்க், டிச. 18—

நல்ல குடிதண்ணீர், சாக்கடை வசதிகள் பல பிரதேசங்களில் கையாளப்படும் பலவித மருத்துவ முறைகள் இவைகளே இந்தியாவில் பிணி ஏற்பட்டு பரவக்காரணம் என்று இந்தியாவில் முப்பது ஆண்டு காலமாக ரக்ஷன்ய சேனை டாக்டராகச் சேவை செய்து வரும் கர்னல் வில்லியம் நோபிள் இங்கு ஒரு பேட்டியில் கூறினார்.

இவர் இப்போது ஓய்வு பெற்று இங்கு வந்திருக்கிறார். திருவாங்கூரிலுள்ள காதரைன் பூத் ஆஸ்பத்திரிக்கு இவர் செல்ல விருக்கிறார்.

இவர் மேலும் கூறியதாவது :—

டைபாயிட்,மலேரியா, கொக்கிப் புழு வியாதிகள் தான் இந்தியாவில் அதிகம் ஏற்படுகின்றன. இதற்கெல்லாம் காரணம் நல்ல குடிதண்ணீர் சப்ளை இல்லாதது, போதிய சாக்கடை வசதிகள் இல்லாதது முதலியவைகளே.

என் ஆஸ்பத்திரி நாகர் கோயிலில் இருக்கிறது, அங்கு 45000 பேர் வசிக்கிறார்கள். சமீப காலத்தில்தான் இங்கு குடிதண்ணீர் சௌகரியம் ஏற்படுத்தப் பட்டது. வெய்யில் காலத்தில் இவ்வளவு உஷ்ணம் இல்லாதபோனால் வியாதி இன்றும் அதிகமாகவே பரவும்.

மற்றொரு பெரும் பிரச்சனை போக்குவரத்து வடதியின்மை, சில கிராமங்களுக்குச் செல்ல நல்ல ரஸ்தாக்கள் கிடையாது.

இவ்வளவு வசதி குறைவுகள் இருந்தும் டாக்டர்கள் தங்களாலான உதவிகளைச் செய்து வருகிறார்கள்.

இப்போது மக்களிடையே சுகாதார மனப்பான்மை ஏற்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

தென் சீனாவுக்கு புது ராணுவம்

ஹாங்காங், டிச. 18—

தென் சீனக்கடற்கரைப் பிரதேசங்களைப்பாதுகாப்பதற்காகசீனா புது ராணுவத்தை ஏற்படுத்த விருக்கிறது.

மஞ்சூரியாவுக்கும் கொரியாவுக்கும் துருப்புகள் அனுப்ப நேரிட்டு விட்டதால் இப்புது ராணுவம் சிருஷ்டிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது,

இப்புது ராணுவத்திற்குஜெனரல் யெ சின் கிங் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

காமன்வெல்த் பிரதமர்கள் மாநாடு

ஸ்மெத்விக் (ஸ்டபோர்ட்ஷயர்), டிச. 18—

வரப்போகும் காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் உலகின் எல்லா முக்ய பிரச்னைகளும் விவாதிக்கப்படும் என்று காமன்வெல்த் உறவு மந்திரி தோழர் பாட்ரிக்கார்டன்வாக்கர் கூறினார்.

கொரியா, சீனா பிரச்னைகளைத் தீர்ப்பதில் ஆசிய நாடுகள் முனைந்திருப்பது காமன்வெல்த் மாநாட்டின் முக்யத்துவத்தை அதிகப் படுத்தியிருக்கிறது.

மந்திரத்தால் மழை பெய்விக்க முயற்சி

—:o:—

பட்டினியைப் போக்க வழியில்லை

அன்னதானம் நடைபெறுகிறது

இராஜபாளையம், டிச. 10—

இராஜபாளையம் அய்யனர் கோவில் மலையில் கடந்த 15 நாட்களாக யாகமும் வருணதேவன் பூசையும் நடந்து, நாளொன்றும் 1000 பார்ப்பனர்க்கு அன்னதானம் செய்யப்பட்டது. ஆனல் மழை பெய்யவில்லை. உழைக்கும் மக்களுக்கு ரேஷனில் அரசி கிடைக்கவில்லை. அதே பகுதியில் 15,000 நெசவாளர்கள் பட்டினி கிடக்கின்றனர். இவர்களைக் கவனியாமல் பூசை முதலியவற்றைச் செய்து, இவற்றிற்காக உணவுப் பொருள்களைத் தேக்கியவர்கள் சட்ட வரம்புக்குள் வர மாட்டார்களோ! அரசாங்கம் இவற்றையெல்லாம் கவனியாதோ! அல்லது மதத்தின் பெயரால் எதையும் செய்ய அரசாங்கம் அனுமதிக்கிறதோ! எனவே, இனி மக்கள் மதத்தின் பெயரைக் கூறிக் கொண்டு எச் செயலையும் செய்ய முனைந்து விடுவரென்று தெரிகிறது.

பட்டினிக்குப் பலி

வறுமையின் கொடுமையால், மனைவியும் மக்களும் பட்டினியால் வாடுவதைக் காணச் சகிக்க முடியாமல், தூத்துக்குடி ரகுமதுலாபுரம் கீழ்த் தெருவில் குடியிருக்கும், வேம்புச் செட்டியார் என்பவர் தற்கொலை செய்துகொண்டு இறந்தார்.

மணிக்கு *1700* மைல் செல்லும் விமானம்

நியூயார்க், டிச. 18—

மணிக்கு 1700 மைல் செல்லும் விமானம் 1960-க்குள் கண்டுபிடிக்கப்பட்டு உபயோகத்திற்கும் வந்துவிடும் என்று அமெரிக்க மெகானிகல் எஞ்ஜினியரிங் சொஸைட்டிக்கு இரு எஞ்ஜினியர்கள் அறிவித்திருக்கின்றனர். இந்த விமானம் இப்போதுள்ள விமானங்களைப் போல் மிகப் பெரியவைகளாக இரா என்றும் மெல்லிய உருவமுள்ளதாக இருக்கும் என்றும் இந்தியாவிலிருந்து லண்டனுக்கு நான்கு மணி நேரத்தில் இதில் சென்றுவிடலாம் என்றும் இந்த எஞ்ஜினியர்கள் கூறுகிறார்கள்.

ஸயாமுக்கு புது ரஷ்ய ஸ்தானீகர்

பாங்காங், டிச. 18—

ஸயாமின் புது ரஷ்ய ஸ்தானீகராக பியோடர் பவலோவிச் டோல்டா என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவருடைய நியமனத்தை ஸயாம் மந்திரி சபை ஏற்றுவிட்டது.

பத்திரிகாலயத்தில் போலீஸ் சோதனை

சிங்கப்பூர், டிச. 18—

மலேயாவின் கம்யூனிஸ்ட் பத்திரிகையான 'நான்சியாஜிட்போ' வின் காரியாலயம் சோதனையிடப்பட்டு அங்கு காணப்பட்ட கம்யூனிஸ்ட் பிரசுரங்கள் கைப்பற்றப்பட்டன.

இப்பத்திரிகையைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

அழிவுப் பிரசாரம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையை வளரவிட்டுக் கொண்டிருப்பார்களா மக்கள். நாடாளும் காங்கிரஸ் கட்சிக்காரருக்கோ திராவிடர் இயக்கத்தவர்களை அழித்திடும் திட்டம் போட்டு தீவிரமாக ஆலோசனை செய்து வருகின்றனர். மந்திரிகளுக்கோ ஊர்சுற்றி வரவே காலம் போதவில்லை. இக்கோலம் அவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது. நகரசபைக்கோ, ஆங்காங்கே பூங்கா அமைப்பதற்கு, பூபதிகளுக்கு பூமாலை சூட்டுவதற்குமே பணம் போதவில்லை! பழங்குடி மக்களின் அற்பமான பிரச்சினையைக் கவனிக்க அவர்களுக் கெங்கே பணம் இருக்கிறத? வேதனை தரும் நிலை. இந்நிலை ஏற்பட்டு ஆண்டுகள் பல கடந்து அறிந்தார்.

தோழர் ஏ. ராகவரெட்டி அவர்கள் (நகர அபிவிருத்தி - டிரஸ்ட் தலைவர்) லட்சுமிபுரம் யுவர் சங்கத்தில் பேசுகையில் சொன்னர்.

"சென்னையில் குடிசைகள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. உதாரணமாக, சென்ற ஒரு மாதத்தில் மெரினவில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் காரியாலயத்திற்கு அருகில் சுமார் 100 குடிசைகள் கட்டப்பட்டிருக்கின்றன",

அத்துடன் சென்னையில் 250 சேரிகள் இருக்கின்றன. அவைகளை ஒழித்து அதில் வசிப்போருக்கு வேறு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென கூறினர். இப்படிச் சொல்லிக் கொண்டிருப்பதால் பயனில்லை. காங்கிரஸ் தோழர்கள் திராவிடர் இயக்க எதிர்ப் பிரசாரம் செய்து மாபெரும் அழிவைத் தேடிக் கொள்வதைவிட அவர்கள் சிறிது நாள் நாட்டில் நடமாட வேண்டுமென்றால் இத்தகைய காரியத்தில் இறங்க வேண்டுமென மக்கள் எதிர் பார்க்கிறார்கள்.

கொழும்புவில் வ. உ. சி. நினைவு விழா

தி. மு. கழகத்தின் ஆதரவில் சென்ற கிழமை ஆட்டுப்பட்டித் தெரு பெண்கள் உயர் நிலைப்பள்ளி மண்டபத்தில் நடைபெற்ற 'வ. உ. சிதம்பரனர் நினைவு தினப் பொதுக் கூட்டத்திற்கு' தோழர் டி. எம். பீர்முகமது அவர்கள் தலைமைவகித்தார்கள். சிதம்பரனரின் தீரச் செயல்களையும், தியாகத்தையும் தோழர்கள் சு. சண்முகம். குலசேகரன். இளஞ்சேரன், பிடி. லூக்காஸ் மற்றும் பலர் எடுத்து விளக்கினர்கள். கூட்டத்தின் முடிவில் வ. உ. சிதம்பரனரின் படங்கள் இலவசமாக விநியோகிக்கப்பட்டன. தலைவர் டி. எம். பீர்முகமது அவர்களது தலைமைச் சொற்பொழிவின் சுருக்கம் பின் வருமாறு :—

தோழர்களே! இந்த உலகத்தில் தினமும் ஆயிரக்கணக்கானவர் பிறக்கின்றனர்; இறக்கின்றனர். அவர்களைப் பற்றியெல்லாம் அறியாத, சிந்தனை செய்யாத நாம், சிதம்பரனர் போன்ற சிறந்த செயல்புரிந்தச் சிந்தனைச் சிற்பிகளைப்பற்றித் தான் எண்ணுகின்றோம், மதிப்புக் கொடுக்கின்றோம். அவர்கள் சென்ற சிறந்த சிந்தனைப் பாதையிலே, சேவைப்பாதையிலே சென்று, செயலாற்றி சிறப்புப் பெறவேண்டுமென்று மக்களுக்கு நினைவூட்டுகின்றோம். ஆகவேதான் சிதம்பரனரின் இந்த சிறந்த தினத்தை சிறப்புடன் கொண்டாடுகின்றோம்; அவர்கள் செய்த அரும்பணிகளை அன்புடன் போற்றி அதன்படியொழுகி உயர, நாமும் தயாராக வேண்டுமென்று கூறுகின்றோம். இதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்க முடியாது.

அன்னியன் ஆட்சியில் அடிமைப் பட்டுக்கிடந்த மக்களை, ஆர்வத்தோடு தட்டியெழுப்ப, ஆரம்பத்தில் காங்கிரஸ் அங்கத்தவராக இருந்துதான் சிதம்பரனர் அறப் போரில் ஈடுபட்டார், என்றாலும், காலப்போக்கில் காங்கிரசிலே பிற்போக்கு வாதிகள் பலர் ஈடுபட்டு மக்களைத் தவறான பாதையிலே அழைத்துச்செல்ல ஆயத்தமானதும், காங்கிரசைவிட்டுவெளியேறி, கண்ணியமான கருத்துக்களை மக்களிடை பரப்ப முயற்சி செய்யலானர். தமிழுக்காகவும் அவர் சிறந்த சேவைகள் செய்து, ஓர் உயர்ந்த தமிழறிஞராகவும் திகழ்ந்தார். அந்த வீரன் பணிபுரிந்து பல இன்னல்கள் ஏற்ற அந்தக்காலத்தை ஒரளவுக்கு சிந்தித்துப் பார்ப்போமானல், உண்மையில் நாம் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. "போலீஸ்" என்றாலே புதருக்குள் பதுங்கும் காலம்; சர்க்கார் உத்தியோகஸ்தர்களைக் கண்டால், சலாம்போட்டு சலுகைசெய்யும்காலம். அப்படிப்பட்ட காலத்தில் சர்க்காரையும் போலீசையும் வன்மையுடன் எதிர்த்துப் பேசி, சிறைக்கூடம் சென்றார் என்றால், எவ்வளவு திறன்படைத்த தீரனக இருக்கவேண்டும் என்பதை நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்.

அறிவிப்பு

திராவிட மாணவர் முன்னேற்றக்கழக மாநில மாநாட்டினையொட்டி, கோவை மாவட்டமெங்கும் மாணவர் முன்னேற்றக்கழகத்தின் கிளைகளைப் பரப்பி, திராவிட சமுதாய முன்னேற்ற வேலைகளைத் தொடர்ந்து நடத்த கோவை மாவட்டத்தைச் சார்ந்த, மாணவர்கள், மாணவர் கழகங்களைத்தோற்றுவித்து கோவைக் கழகத்திற்கு அறிவிக்க வேண்டுகிடுறன். அமைக்கப்பட்டிருக்கின்ற கழகங்கள் பற்றிய குறிப்புகளையும், அமைக்கும் கழகங்கள் பற்றிய குறிப்புகளையும் இம்மாத இறுதிக்குள் அறிவிக்க வேண்டுகிறேன்.

தொடர்ந்து பல வேலைகள் இம்மாவட்டத்தில் நடைபெற வேண்டியிருப்பதால், மாணவத் தோழர்கள் அனைவரும் ஒத்துழைத்துப் பணியாற்ற முன் வரவும்.

21—12—50 வியாழக்கிழமை மாலை 5-மணிக்கு நகர திராவிட முன்னேற்றக் கழகக் கட்டடத்தில் கோவை நகர திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் அவசியம் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

செக்கிழுத்தார்; ஆனல் சிந்தனையைச் சிதறவிடவில்லை. கல்லுடைத்தார், ஆனல் கலங்கவில்லை. தனது ஜீவியத்தை ஓரளவுக்கு சிறமமின்றி பாதுகாத்துக்கொள்ள தான் பெற்றிருந்த வக்கீல் பட்டத்தையும் ரத்து செய்தனர் ஆட்சியினர், அஞ்சவில்லை. என்றாலும் மக்களின் மனோநிலை மாறவில்லையே என்பதிலே, அதிகமான கவலைகொண்டு மனமுருகி வருத்தப்பட்டிருக்கின்றார். அவ்வளவு சிறந்தசேவையாளருக்கு இன்றைய இந்திய சர்க்காரும், காங்கிரஸ் கட்சியினரும் மரியாதையோ மதிப்போ கொடுக்கவில்லை என்பதை எண்ணும்போது, வருந்தாதிருக்க முடியவில்லை. அவர் நாமம் தாங்கி, கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் ஒரு கப்பல் தனிப்பட்டோர் சிலரின் கூட்டு முயற்சியினல்விடப்பட்டிருக்கிறது. ஆனல் அந்தக் கப்பலை பார்வையிட்டவர்கள் கூறுவதைக் கேட்டால், நாம் வெட்கப்படக் கூடிய நிலையில்தான் இருக்கிறோம்விசாகையிலே இந்தியப் பிரதமர் ஜவகரால் முதன் முதலாக மிதக்கவிடப்பட்ட 'ஜல உஷா' 'ஜலப்ரபாக்கள்' சிதம்பரங்களாக இருந்திருக்கவேண்டும். அந்த விஷயத்தில் நன்றி மறந்த செயல்தான் இந்திய சர்க்கார் செய்துவிட்டனர். இதை யாரும் மறுக்க மறக்க-மறைக்க முடியாது. மற்றும் விழா கொண்டாட வேண்டிய அவசியத்தைப்பற்றி விளக்கிப் பேசியதுடன், இன்றைய இந்திய சர்க்காரின் போக்கையும், சென்னை அரசியலாரின் அடக்கு முறைகளையும் கண்டித்து விளக்கமாகப் பேசி முடித்தார்.

கழக நடவடிக்கைகள்

கொழுப்பலூர்:—2-12-50ல் தி. மு. இளைக்கழகச் செயற்குழுக் கூட்டம் ம. அ. முனிபத்திரன் தலைமையில் நடைபெற்றபோது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்;

மு. முத்துசாமி, செயலாளர். பூ. இராசேந்திரன், உதவிச் செயலாளர். ஜெ. அய்யண்ணன், பொருள் காப்பாளர். ர. கண்ணன், விளம்பர உறுப்பினர். கே. சக்கரை, வி. ஜே. கெம்பு, . சாமிநாதன், மு. அப்பு, ஜே. துரைசாமி, து. சந்தோஷம், கே. வி. ப்பாண்டைராஜு, எம். இராசேந்திரன், பூங்காவனம். ஆகியோர் செயற்குழுவினர்

* * *

திருவாரூர் கிளை: கழகம் கலைக்கப்பட்டு (1950—51) ஆண்டு புதுக்குழு கூட்டப்பட்டு, தோழர் இரா. கோபால்சாமி அவர்கள் தலைமையில் உறுப்பினர் தேர்தல் நடந்தது. செயலாளர் மு. கா. மொய்தீன் பிச்சை துணைச்செயலாளர் மு. கருப்பையன்; பொருளாளர் கே. கோவிந்தசாமி; விளம்பர உறுப்பினர்: டி. பி. டி. சம்பத். உறுப்பினர்கள் இரா. தென்னன், இரா. கோபால்சாமி, எஸ். என். வைத்திலிங்கம், நா. கோவிந்தராசன், கோ. வீரையன், அ. முகம்மது உமர், வெ. சு. மணி, சி. நடராசன்.

* * *

சூலூர்:—சொற்பயிற்சிக் கழக கூட்டம் 10-12-50 தேதி மாலை 4மணிக்கு, "கோவை முரசு" ஆசிரியர் எஸ். எ. மாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முகவுரையாகச் சிறிது பேசிய பின்னர் தோழர்கள் எஸ். என். அருணசலம், எஸ். எ. நாச்சிமுத்து, ஆர். எஸ். மணியம், எஸ். கே. அழகப்பன், எஸ். பி. ரங்கசாமி மற்றும் பல தோழர்களும் "தற்கால நிலை" என்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள்.

* * *

புளியங்குடி:—11—12—50 தி. மு. கழக துவக்கவிழாப் பொதுக் கூட்டம் சங்கரநயினார்கோவில் தி. மு. க. செயலாளர், தோழர். டி. ஆர். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. தோழர்கள், ஆ. திராவிடமணி, அறுப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி ஆகியோர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

* * *

சென்னை:—15-12-50ல் தி. மு. க. அங்கத்தினர் கூட்டம் தோழர் சே. தேவசகாயம் தலைமையில் நடைபெற்றது. இவ்வாண்டுக்குக் கீழ்க்கண்டவர்கள் செயற்குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்: மு. வரதராசன். விளம்பர உறுப்பினர்: எஸ். ஆர். முத்துகிருட்டினன். பொருள் உறுப்பினர்: எ. எஸ். ராமன், நிர்வாக உறுப்பினர்கள்: சே. தேவசகாயம், ந. மதுரைமுத்து, தி. மு. நெடுமாறன், எஸ். வில்லாளன், பி. ரங்கராசன், டி. கே. கோவிந்தராசன்.

* * *

வத்தலக்குண்டு:—27—11—50-ல் தி.மு.கி. கழகம் நிறுவப்பட்டது. செயலாளர் எஸ். பிச்சை, உ. செ. எஸ். கே. முகமதுபக்ருதீன். பொருள்உறுப்பினர் பி. ஒண்டிமுத்து. விளம்பர உறுப்பினர்: பி. மாணிக்கம். செயற்குழு உறுப்பினர்கள்: டி. துரைராஜ், வி. ராஜ், வி. ஜெயராம், எ. சின்னக்காளை, சி. ராமன், என்; கே. எம். கே. ஆறுமுகம், கே. தங்கையா, எஸ். தணிக்கோடி, எஸ். முத்து 28—11—50செவ்வாய்க்கிழமை மாலை 6-மணிக்கு வத்தலக்குண்டில் தி. மு. கி. கழகத்தின் சார்பாக ரேடியோ மைதானத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடந்தது. அவ்வமயம் தலைமை வகித்தவர் முத்து. பேசியவர்கள். காஞ்சி-கல்யாணசுந்தரம், மதுரை எஸ். முத்து.

* * *

சென்னை:—திராவிட முன்னேற்றக் கழகம் 1-வது வட்டம் தண்டையார்பேட்டை கிளையின் நிர்வாகக் கமிட்டி கூட்டம் தோழர் ஜி. முனுசாமி தலைமையில் 17-12-50 ஞாயிற்றுக்கிழமை காலை 10-மணிக்கு நடைபெற்றது. கீழ்க்கண்டவர்கள் 1—1—51 முதல் கழக நிர்வாகஸ்தர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: பு. மேகலிங்கம். துணைசெயலாளர்: ஆர். எஸ். தம்பி. பொருளாளர்: ஆர். வேலு. விளம்பர உறுப்பினர்: எ. தணிகாசலம். இதர உறுப்பினர்கள்: தோழர்கள்: ராஜன், வேணு, குருசாமி, மணி, முனுசாமி. ஜனவரி மாதத்தில் ஓர் பொதுக் கூட்டத்தை நடத்துவதென்றும், நிர்வாக உறுப்பினர்கள் சந்தா ரூ. ஒன்று வீதமும், அங்கத்தினர்கள் சந்தா அணா. நான்கு வீதம் வசூலிப்பதென்றும், கழகத்திற்கு சில அங்கத்தினர்கள் பத்திரிகைகள் வாங்கி இனமாகத்தருவதாகத் தெரிவித்ததை ஏற்று அவர்களுக்கு நன்றி கூறுவதென்றும் முடிவு செய்யப்பட்டது என்று விளம்பர உறுப்பினர் ஆர். எஸ். தம்பி எழுதுகிறார்.

* * *

செயங்கொண்டான்:—20-12-50 திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் சி. அரங்கனாதன் தலைமையில் கூடியபோது செயலாளர் சு. இளநாகன்; துணைச் செயலாளர் கு. இலக்குவன்; பொருளாளர் இரா. கூத்தரசன்; விளம்பர உறுப்பினர் ஆ. இராமசாமி. நிர்வாகக்குழுவினர் மற்றும் 9 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் ந. மணியரசு, ந. குலோத்துங்கன், கோட்டை நெடுமாறன், இரா. ம. மாமுனி, சி. அரங்கநாதன், கோ. விசுவநாதன், இ. வே. முத்துவேலன், ம. மதிவாணன், ப. ஆயர்க்கோன் ஆகியோர் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மலேயா பிரிட்டிஷ் அதிகாரிகள்

குலாலம்பூர், டிச. 18—

மலேயா பிரிட்டிஷ் அதிகாரிகளில் அநேகர் இப்பொழுது பிரிட்டனுக்கு ராஜவில் சென்றிருக்கின்றனர். கம்யூனிஸ்ட் கலகக்காரர்களை ஒடுக்க நடவடிக்கை எடுப்பதின் பொருட்டு இவர்கள் சீக்கிரமே திரும்பும்படி அழைக்கப்படுவர். என மலேயா ஹை கமிஷனர் குர்னே அறிவித்திருக்கிறார்.

வாக்காளராகப் பதிவுபெறும் காலம் நீடிப்பு

புதுடில்லி டிச. 17—

வாக்காளர் ஜாபிதாக்களில் சேர்க்கப்படாத நபர்கள், வயதுவந்தவர்கள் பதிவு செய்துகொள்ளும் காலத்தை ஜனவரி 15ந்தேதிவரை ஒத்திவைத்துள்ளனர். பல பாஷைகள் பேசப்படும் பிரதேசங்களில் இக்கால அவகாசம் இன்னும் நீடிக்கலாம்.

1-1-51-ல் வெளிவருகிறது!

"புராக்கிரஸ்"

(ஆங்கில வார இதழ்)

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை எம். ஏ.,

எல்லா ஊர்களிலும் விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை.

தனிப் பிரதி அணா. 2. வருட சந்தா ரூ. 6.

விவரங்களுக்கு:

"புராக்கிரஸ்" அலுவலகம்

2/45, முத்துமாரிச் செட்டித் தெரு,

மண்ணடி :: சென்னை-1.

காஞ்சி மாநாடு

உணவு வசதி

காஞ்சியில் நடைபெறப்போகும் செங்கற்பட்டு மாவட்ட தி-மு-க-மாநாட்டிற்கு வருபவர்களுக்குத் தனிப்பட்ட முறையில், சாப்பாடு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. சிற்றுண்டிக்கான வசதிகளும் பந்தலிலேயே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கண்காட்சி

கைத்தறி சம்பந்தமான கண்காட்சியை காஞ்சி குமரன் அண்ட் கோ, நிர்வாகியர் ஏற்பாடு செய்து வருகிறார்கள். தறிசம்பந்தமான சகல காட்சிகளையும் காணலாம்.

பந்தல்

பிரம்மாண்டமான பந்தல், அலங்கார முகப்போடு போடப்பட்டு வருகிறது. அநேகமாக எல்லா வேலைகளும் முடிந்து விட்டன.

சித்திரக்காட்சி

ஓவியர்களைக்கொண்டு அறிவு விளக்கம் தரும்படியான பல்வகைச் சித்திரங்கள் தீட்டப்படுகின்றன. புள்ளி விவரங்கள் ஆராய்ச்சியுரைகள், ஆளவந்தாரின் 'தேய்பிறை'க் கதைகள் யாவும் சிறந்த முறையில் தீட்டப்பட்டுக்கொண்டுள்ளன.

வாரீர்! வாரீர்!!

காஞ்சி மாநாடு—நமது எழுச்சி முரசாக இருக்கும்! இலட்சியவீரர்களின் முகாமாக இருக்கும்! எல்லா மாநாடுகளையும்விட சிறந்ததாக இருக்கும்! ஆளவந்தாருக்கு எச்சரிக்கை தரும் மாநாடாக இருக்கும்! ஆகவே எல்லோரும் வாரீர்!!

ஆர், கே. மூர்த்தி
ஈ. எதிராசு
விளம்பர உறுப்பினர்கள்.

பிரெஞ்சு பிரதமர் ட்ருமனை சந்திப்பார்

பாரிஸ். டிச, 18—

பிரெஞ்சு பிரதமர் லெவன் பிரஸிடெண்ட் ட்ருமனை சந்தித்துப் பேச ஜனவரி மத்தியில் வாஷிங்டன் செல்வார் எனத் தெரிகிறது.

அமெரிக்க ஆயுத உதவிகுறித்து இவர் ட்ருமனிடம் நேரில் பிரான்ஸின் கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பார் எனத் தெரிகிறது. இந்தோசீனா விஷயமும் குறித்து இவர்கள் சம்பாஷணையில் பேசப்படும் எனத் தெரிகிறது.

புதிய ஏஜெண்டுகள் தேவை

1-ஆண்டாக பணியாற்றி வரும்

"மக்கள்மணி"

(தி. மு. வார இதழ்)

ஆசிரியர்: தி. பொ. ஜெகந்நாதன்.

தனிப் பிரதி விலை அணா 1.

இல்லாத ஊர்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் உடனே தேவை.

நிர்வாகி: "மக்கள்மணி"
84, பிடாரியார் கோயில் தெரு,
சென்னை-1.

திராவிடர் திருநாளன்று மலருகிறது!

"தீ" பொங்கல் மலர்

மறுமலர்ச்சி எழுத்தாளர்களின், கதை, கவிதை, உருவப்படங்கள் நிறைந்துள்ள மலரின் விலை அணா-8.

ஏஜண்டுத் தோழர்கள் தங்கள் தேவையான பிரதிகட்கு 25%கமிஷன் தொகை நீங்க முன்பணம் அனுப்பி பதிவு செய்துக்கொள்ளவும்.

'தீ' வாசகர்கள் உங்களூர் ஏஜண்டுகளிடம் மலருக்கு முன்னதாகவே பதிவு செய்துக்கொள்ளவும்.

ஒரு அணா விலையில் வெளிவரும். "தீ" திராவிடர் வாரத்தாளினை விற்பனை செய்ய ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில் முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை எழுதவும்.

அலுவலாளர்
"தீ" அலுவலகம்
132, பிராட்வே சென்னை-1

சந்தா விவர

1. ஆண்டு	ரூ.	12—8—0
6. திங்கள்	ரூ.	7—0—0
3. திங்கள்	ரூ.	3—8—0

தனிப்பிரதி அரையணா. மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விளம்பர விகிதம்

அங்குலம் ஒன்றுக்கு ரூ. 5—0—0

நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு விவரங்களுக்கு எழுதவும்.

"மாலைமணி" பதிப்பகம்
மண்ணடி-சென்னை-1

Edited, Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty street, Madras-1.